## சுருக்கம்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2010–2011–ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களைத் தேர்வு செய்யும் குழு மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசு ஆணை (1டி) எண். 269 நாள்: 27.05.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 19.03.2009.
2. அரசாணை (1டி) எண்.239, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 18.05.2010.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண். 29364/2010/AGAMT-III, நாள் 21.05.2010.

* * * * *

ஆணை:

2008-09 மற்றும் 2009–10–ஆம் ஆண்டுகளுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை தேர்வு செய்யும் குழு மாற்றியமைக்கப்பட்டு படிக்கப்பட்டவை 1–ல் உள்ள அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. மேலும், படிக்கப்பட்டவை 2–ல் உள்ள அரசாணையில் 2010–11–ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்காக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. அதில், ஏனையவற்றிக்கிடையே, 2010–11–ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்கள் மாநில அளவில் இத்துறையில் அனுபவம் வாய்ந்த நபர்கள் அடங்கிய திருத்தியமைக்கப்பட்ட குழுவால் தேர்வு செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. படிக்கப்பட்டவை 3–ல் உள்ள கடிதத்தில் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, 2010–2011–ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்குப் புத்தங்களை வாங்குவது சம்மந்தமாக, புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் புத்தகம் வழங்குவதற்கு விருப்பம் தெரிவிப்பதற்கான (Expression of Interest) அறிவிப்பு 20.04.2010 அன்று பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டு, 21.05.2010–க்குள் விருப்பம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும், அதன்படி, புத்தகப் பதிப்பாளர்கள் / புத்தக விற்பனையாளர்கள் புத்தகங்கள் வழங்குவதற்கு தங்களுடைய விருப்பங்களைத் தெரிவித்து அதனுடன் மாதிரிப் புத்தகங்களையும் அனுப்பியுள்ளார்கள் எனவும் தெரிவித்து, 2010–11–ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்க அனுபவம் வாய்ந்த நபர்கள் அடங்கிய குழுவினை நியமனம் செய்யுமாறு அரசினை வேண்டியுள்ளார்.

(த.பி.பா)

3. மேற்கண்ட சூழ்நிலையில், ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ) 2010–2011–ஆம் ஆண்டுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கான புத்தகங்களைத் தேர்வு செய்யும் குழு (reconstituted committee) கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| 1. | திரு. ட்டி. உதயசந்திரன், இ.ஆ.ப.<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,<br>சென்னை. | தலைவர் மற்றும் கூட்டுநர். (Chairman and convener) |
| 2. | டாக்டர். ஆர். அம்புஜா,<br>நூலகர், சென்னை பல்கலைக் கழகம்,<br>சென்னை. | உறுப்பினர் |
| 3. | திரு.கே.வி.எழிலரசு,<br>இயக்குநர், தமிழ் வளர்ச்சி,<br>சென்னை. | உறுப்பினர் |
| 4. | திரு.டி.ஜெகன்னாதன்,<br>கூடுதல் இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி,<br>சென்னை–15. | உறுப்பினர் |
| 5. | திரு.பி.பொன்னையா,<br>கூடுதல் இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி (ம)ஊராட்சி,<br>சென்னை.15. | உறுப்பினர் |
| 6. | திரு.ஜி.அறிவொளி,<br>இயக்குநர், பொது நூலகத் துறை. | உறுப்பினர் |
| 7. | திரு.எல்.பேட்ரிக் ரோச்,<br>நூலகர்,<br>சென்னை கிறித்துவக் கல்லூரி<br>மேல்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை. | உறுப்பினர் |

(ஆ) புத்தகங்களை தேர்வு செய்வதைத் தவிர, பிற பணிகளான புத்தகங்களை வாங்குவதற்கான நடைமுறைகளை (Process) கடைப்பிடித்தல் மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்கான ஆணைகள் (Placement of Orders) பிறப்பித்தல் போன்றவைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரே தொடர்ந்து மேற்கொள்வார்.

(இ) திரு.ட்டி.உதயசந்திரன் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநராகப் பொறுப்பேற்றப் பிறகும் இக்குழுவின் தலைவர் மற்றும் கூட்டுநராக (Chairman and convener) நீடிப்பார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (சென்னை நீங்கலாக)
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்,
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்